## செப்டம்பர் - 06 - புதன்

**கடவுளே! நீர் இவ்வாறு எனக்குச் செய்துள்ளதால் உமக்கு என்னென்றும் நன்றி கூறுவேன். (தி.பா.52:9)**

### முதல் வாசகம் : கொலேசியர் 1: 1 – 8

கிறிஸ்துவோடு இணைந்து நம்பிக்கை கொண்டவர்களாகளாய் வாழும் சகோதரர் சகோதரிகளாகிய கொலோசை நகர இறை மக்களுக்குக் கடவுளின் திருவுளத்தால் கிறிஸ்து இயேசுவின் திருத்தூதனாயிருக்கும் பவுலும் சகோதரர் திமொத்தேயுவும் எழுதுவது: நம் தந்தையாம் கடவுளிடமிருந்து உங்களுக்கு அருளும் அமைதியும் உரித்தாகுக! உங்களுக்காக நாங்கள் வேண்டும் பொழுதெல்லாம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறோம். கிறிஸ்து இயேசுவின்மீது நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கை பற்றியும் இறைமக்கள் அனைவரிடமும் செலுத்தும் அன்பு பற்றியும் நாங்கள் கேள்வியுற்றோம். இவை இரண்டும் விண்ணகத்தில் உங்களுக்கென வைக்கப்பட்டிருக்கும் நன்மைகளை எதிர்நோக்குவதால் விளைந்தவை. நீங்கள் முன்பு கேட்ட உண்மையின் நற்செய்தி வழியாக அந்த எதிர்நோக்கு பற்றி அறிந்து கொண்டீர்கள். உலகம் முழுவதும் பரவிப் பயனளித்துவரும் அந்நற்செய்தி உங்களை வந்தடைந்தது. கடவுளின் அருளைப்பற்றிக் கேட்டறிந்து அதன் உண்மையை நீங்கள் உணர்ந்து கொண்டீர்கள். அந்நாள் முதல் உங்களிடையே அது பெருகிப் பயனளித்து வருகிறது. எம் அன்பார்ந்த உடன் ஊழியர் எப்பப்பிராவிடமிருந்து அதை நீங்கள் கற்றுக் கொண்டீர்கள். உங்களுக்காக உழைக்கும் அவர் கிறிஸ்துவின் உண்மையான திருத்தொண்டர். தூய ஆவி உங்களுக்கு அருளிய அன்பைக் குறித்து அவர் தாம் எங்களிடம் எடுத்துரைத்தார்.

**பதில்பாடல் :** கடவுளின் பேரன்பில் எப்போதும் நிலையான நம்பிக்கை வைத்துள்ளேன்.

### நற்செய்தி : லூக்கா4 : 38 – 44

அக்காலத்தில் இயேசு தொழுகைக் கூடத்தைவிட்டு, சீமோன் வீட்டிற்குள் சென்றார். சீமோனின் மாமியார் கடுங்காய்ச்சலால் துன்புற்ற நிலையில் இருந்தார். அவர்கள் அவருக்காக இயேசுவிடம் வேண்டினார்கள்.இயேசு அவரருகில் நின்று, காய்ச்சலைக் கடிந்துகொள்ள அது அவரைவிட்டு நீங்கிற்று. உடனே அவர் எழுந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தார். கதிரவன் மறையும் நேரத்தில், எல்லாரும் தங்களிடையே பற்பல பிணிகளால் நலம் குன்றி இருந்தோரை அவரிடம் கூட்டிவந்தார்கள். அவர் ஒவ்வொருவர்மேலும் தம் கைகளை வைத்து அவர்களைக் குணமாக்கினார். பேய்களும், "நீர் இறைமகன்" என்று கத்திக்கொண்டே பலரிடமிருந்து வெளியேறின. அவர் மெசியா என்று பேய்கள் அறிந்திருந்தபடியால், அவர் அவற்றை அதட்டி, பேசவிடாமல் தடுத்தார்.பொழுது விடியும் வேளையில் இயேசு தனிமையான ஓர் இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். திரளான மக்கள் அவரைத் தேடிச் சென்றனர் அவரிடம் வந்து சேர்ந்ததும் தங்களைவிட்டுப் போகாதவாறு அவரைத் தடுத்து நிறுத்தப் பார்த்தனர்.அவரோ அவர்களிடம், "நான் மற்ற ஊர்களிலும் இறையாட்சியைப் பற்றி நற்செய்தி அறிவிக்க வேண்டும் இதற்காகவே நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்" என்று சொன்னார்.பின்பு அவர் யூதேயாவிலுள்ள தொழுகைக்கூடங்களில் நற்செய்தியைப் பறைசாற்றிவந்தார்.

**தியானம்:** கடவுளின் அன்பை இறைமகன் இயேசு தம் பணிவாழ்வில் தாம் சந்தித்த மக்களிடையே மிகத் தெளிவாக வெளிப்படுத்தியதை இன்றைய இறைவார்த்தைகள் தெளிவுபடுத்துகின்றன. நற்செய்தியில் பலவிதமான நோய்களிலிருந்தும் சாத்தானின் கெடுபிடிகளிலிருந்தும் குணமளிக்கும் வல்லவரான நசரேத்தூர் இயேசுவை சந்திக்கின்றோம். நமது வாழ்விலும் நாம் எதிர்பாராத நேரத்தில் கடவுள் நம்மையும் தொடுகின்றார். ஆனால் நாம் அதை உணர்ந்து கொள்வதில்லை. அது ஒரு சுகயீனத்திலோ அல்லது நமது நெருக்கடி வேளையிலோ இருக்கலாம். சீமோனின் மாமியாரை இயேசு குணப்படுத்தியதை நற்செய்தி கூறுகின்றது. காச்சலிலிருந்து விடுபட்ட பெண் உடனே எழுந்து மற்றவர்களுக்கு பணி செய்வதில் ஈடுபடுகின்றாள். நமக்குத் தரப்பட்டுள்ள உடல் நலமும், உடல் வலிமையும் திறமைகளும் பிறருக்கு பணி செய்வதற்காகவே என்பதனை உணர்ந்து கொள்கின்றோமா? உலகிற்கு ஒளி நீங்கள் என்கின்றார் இயேசு. ஒளி என்பது எப்போதும் பிறர் வாழ்வுபெற தன்னை உருக்கிக் கொள்ளும். ஒளியான இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் அவருடைய சீடர்களாகிய நாமும் பிறருக்கு ஒளியாக வாழவேண்டுமென்பது இயேசுவின் ஆவல். ஒளியான இயேசுவின் பாதையில் நடப்போம்.